Issued 24—6—1965]

1756

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

THURSDAY, 25TH MARCH 1965

VOLUME XXIX—No. 1

CONTENTS

		PAGES
I	Questions and Answers	1–13
II	Presentation of Final Supplementary Statement of Expenditure for 1964–65	13–15
III	Voting on Demands for Grants for 1965–66—*cont.*	
	(1) Demand No. X—Administration of Justice	15–106
	(2) Demand No. XXI—Cinchona	
	(3) Demand No. XXII—Khadi	
	(4) Demand No. XXIV—Forest Department	
	(5) Demand No. XLV—Capital Outlay on Forests	
IV	Papers laid on the table of the House	106

©
GOVERNMENT OF MADRAS
1965

Legislative Assembly Department
Madras

PRICE 50 *Paise.*]

29th March 1965]

Pension scheme for administrative staff in aided Colleges

* 355 *Q.*—SRI A. ARUMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether representations have been received from the President, University Teachers' Association, Madras, for the inclusion of administrative staff of aided colleges to the Pension Scheme; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The matter is under examination.

Protest by self-immolation

* 356 *Q.*—SRI S. J. RAMASWAMI :
SRI M. KALYANASUNDARAM :
SRI A. KUNJAN NADAR :
SRI S. MADHAVAN : } Will the Hon.

the Chief Minister be pleased to state whether there were any cases of self-immolation by individuals as a protest against the imposition of Hindi as official language with effect from 26th January 1965?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There were seven cases of self-immolation by individuals during the recent Anti-Hindi agitation. Enquiries reveal that domestic troubles, illness, etc., also motivated them to take this extreme step.

திரு. எஸ். ஜே. சாமசாமி : இம்மாதிரிச் சம்பவம் எந்தச் சமயத்திலுமே, எப்போதுமே நடைபெற்றது கிடையாது. சர்க்காரின் தவறான கொள்கையினால் ஏற்படுகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். இந்த விஷயத்தில் இம்மாதிரி நடைபெற்றதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து இனிமேலாவது இப்படி நடக்காமல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது அளித்த விடையை விட வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு புனிதமான லட்சியத்திற்காகத் தன் உயிரையே பலியிட்டவர்களின் மீது, பழி கலந்த சேற்றை வாரி இறைத்தது கனம் முதலமைச்சர் பரப்புகிற தமிழர் பண்பாட்டிற்கு உகந்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் பண்பாடு அவரவர்களோடு இருக்கட்டும்.

திரு. எம். எஸ். மணி : இந்தத் தீக்குளித்தவர்களின் குடும்பத்திற்கு நம்முடைய அமைச்சர்கள் யாராவது சென்று ஆறுதல் சொன்னார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி எனக்குத் தகவல் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்தத் தீக்குளித்த 7 பேர்கள் அவரவர்கள் எழுதி வைத்து விட்டுப்போன இந்தி எதிர்ப்பு கோஷங்களையும், கடிதங்களையும் அரசாங்கம் பரிசீலித்ததா? அப்படிப் பரிசிலித்து இருந்தால் அதையும் தவிர்ப்பதற்கான காரணங்களை அமைச்சர் வெளியிடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்திற்குச் சில தகவல்கள் கிடைத்து இருக்கின்றன. அதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை.

மாணக்கருடன் போலீசார் கைகலப்பு

*** 357 கேள்வி.—திரு. எஸ். மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி மதுரை நகரில் தியாகராசர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் மீது போலீசார் தாக்குதல் நடத்தியதற்குரிய காரணங்கள் யாவை?

(இ) அதன் விளைவால் ஏற்பட்ட சேதங்கள் யாவை?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) In defiance of the Prohibitory Order under section 30 of the Police Act then in force, about four hundred students of the Thiagaraja College of Engineering, Madurai assembled on the road outside their college. When the police advised them to disperse in view of the prohibitory order they became violent and indulged in stone throwing. They could be dispersed only after the use of teargas and a mild lathi charge.

(*b*) Some police personnel sustained injuries.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தத் தடியடிப் பிரயோகம் நடந்த திருப்பரங்குன்றம் நெடுஞ்சாலையிலிருந்து 2½ பர்லாங்கிலுள்ள கல்லூரி விடுதிக் கட்டடத்திற்குள்ளே கண்ணீர்ப் பிரயோகம் நடைபெற்றது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது கொடுத்த தகவலை விட என்னிடம் வேறு தகவல் இல்லை. ஆனால் இது விஷயமாக 'பிரைவேட் கம்ப்ளேன்ட்' கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகையினால் இது 'ஸப்ஜூடிஸ்'.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர் அனுமதி பெறாமலே, போலீசாரே உள்ளே நுழைந்து தாக்கல் நடத்தினதாகச் செல்லப்படுகிறதே, அதைப் பற்றிக் கல்லூரி முதல்வர் அரசாங்கத்திடம் தகவல் தெரிவித்திருக்கிறாரா? அதன் மீது அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரி முதல்வர் என்ன தகவல் கொடுத்து இருக்கிறார் என்பதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும். அமைதியை நிலைநாட்டும் வகையிலே சில சமயங்களில் கல்லூரியிலே போலீசார் செல்ல வேண்டியிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கல்லூரி முதல்வர் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதின கடிதத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்திற்கும் விடுதிக்கும் 3 பர்லாங் தூரம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதன் மீது போலீசாரிடம் சமாதானம் கேட்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதல்வர் எனக்கு எழுதிய கடிதத்தில் என்ன குறிப்பிட்டார்கள் என்று எனக்கு நினைவு இல்லை. இதையெல்லாம் போலீசாருக்கு அனுப்பி விசாரணை செய்து என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. சா. கணேசன் : இது சம்பந்தமாகச் சர்க்கார் நேரிடையாகவோ அல்லது அதிகாரிகள் மூலமாகவோ விசாரணை நடத்தி வீணை என்ன என்று தெரிந்துகொள்ள முயற்சித்ததா ? அப்படி என்றால், அதன் பலன் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் அதுபற்றி விசாரித்து இருக்கிறது. ஆனால் மேலும் 'பிரைவேட் கம்ப்ளெய்ன்ட்' இருப்பதால் அதன் முடிவைப் பார்த்த பிறகு தான் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, தியாகராஜர் கல்லூரியிலிருந்து புறப்படக்கூடிய இந்த ஊர்வலத்தை விட்டிருந்தால் அங்கேயுள்ள போஸ்ட் ஆபீஸ்களை கீழே. . .

MR. SPEAKER : It is a hypothetical question. I do not allow it.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதல் அமைச்சர் சில நாட்களுக்கு முன் இங்கு வைத்த அறிக்கையில் இந்தக் கல்லூரி வாசலுக்கு வெளியேதான் கட்டளைகள், கேட்டு காம்பவுண்டுக்குள் இல்லையென்று இருக்கிறது. கல்லூரி முதல்வர் அனுமதி பெறுமலே, போலீஸ்காரர்கள் ஏன் நுழைந்தார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிக்கு வெளியிலேயும் நாக்குதல் நடைபெற்றது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தியாகராஜா கல்லூரி சொந்தக்காரர் திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார் ஹிந்தி மாநாட்டில் கலந்து கொண்டார்கள், ஹிந்தி எதிர்ப்புக்குப் பல கிளர்ச்சிகள் செய்தார்கள் என்ற காரணத்திற்காக இந்தக் கல்லூரி மாணவர்கள் இம்மாதிரி தாக்கப்பட்டார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது முற்றிலும் தவறு.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கிளர்ச்சி நடப்பதற்கு ஒரு தினங்களுக்கு முன்பேயே, தியாகராஜா கல்லூரிக்கு அரசாங்க மான்யம் கொடுக்கக் கூடாது என்று காங்கிரஸ்காரர் பத்திரிகையிலே எழுதியது உண்மையா ? அதன் பேரில் இந்தக் கல்லூரி மீது பழிவாங்கும் படலம் ஏற்பட்டு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

திரு. து. ப. அழகமுத்து : அமைதியை நிலைநாட்ட போலீசார் கல்லூரிக்குச் சென்றார்கள் என்று கூறினார்கள். அப்படியானால் கல்லூரித் தலைவருடைய அனுமதி பெறாமலே போலீஸ் போகலாம் என்பதை முதல் அமைச்சர் ஏற்றுக்கொள்கிறாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சாதாரணமாக கல்லூரித் தலைவர் அனுமதி பேரிலே, கோரிக்கை பேரிலே சொல்வார்கள். சில சமயங்களில் அசாதாரணமான நிலையிலே, போலீஸ் அவர்களுடைய கடமையை செய்ய வேண்டி இருப்பதால் கல்லூரிக்குள்ளும் போக வேண்டி இருக்கும்.

திரு. எம். எஸ். மணி : மற்றக் கிளர்ச்சி நடைபெற்ற பகுதிகளிலே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. மதுரையில் போலீஸ் சுட்டதைப்பற்றி நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. நான் முன்பே கூறின படி 'ப்ரைவேட் கம்ப்ளேண்ட்' இருப்பதால் அதன் முடிவு தெரிந்துகொள்ளப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தியாகராஜர் கல்லூரியில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப்பற்றி, போலீசார் எவர் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா ? வேறு வகையில் அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கண்டறிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசார் கொடுக்கும் தகவலைக் கேட்டு, பாதிக்கப்பட்டவர்கள் கொடுக்கிற தகவலை வைத்து விசாரணை, நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மாணவர்கள் மீது இப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறதே, இந்தக் கல்லூரியை நடத்தும் திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார் சட்ட விரோதமான நடவடிக்கையைப்பற்றி அரசாங்கத்துக்குத் தகவல் வந்தும் அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. யாராக இருந்தாலும் தவறுக, சட்ட விரோதமாக அமைதிக்குப் பங்கம் விளையக்கூடிய வகையில் நடந்தார்கள் என்று தெரிந்தால், அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயங்காது.

திரு. எல். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஆப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதைவிட, இப்போதுதான் சர்க்கார் கையில் ஆயுதம் இருக்கிறதே, அதுதான் 'டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸ்', அதைப் பிரயோகித்து நடவடிக்கை எடுக்கலாமே ?

Mr. SPEAKER : That question does not arise.

29th March 1965]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : மதுரையில் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகத்தால் எத்தனை ஆசிரியர்கள் தாக்கப்பட்டார்கள், கல்லூரி முதல்வர் யாரேனும் தாக்கப்பட்டு இருக்கிறார்களா, மாணவர்களில் தாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Indian army units to quell Anti-Hindi disturbances

* 358 Q.—SRI A. KUNJAN NADAR :
SRI S. MADHAVAN :
SRI P. MURUGAIYAN :
SRI T. P. ALAGAMUTHU :
SRI K. S. MANI : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whetner any units of the Indian Army were brought to the State in connection with the recent Anti-Hindi agitation;

(*b*) if so, the bases from which they were brought;

(*c*) whether Armed Police of other States were also brought in this connection; and

(*d*) if so, the States from which they were brought?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government decline, in the public interest, to disclose these details.

(*c*) Yes.

(*d*) Small units were obtained from the States of Andhra Pradesh, Kerala, Madhya Pradesh, Maharashtra, Mysore and also from the Central Reserve Police.

SRI A. KUNJAN NADAR : Sir, was there any request from the Inspector-General of Police that the Police cannot manage the situation and hence the military should be called?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There was nothing like that.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த ராணுவம் இன்னும் எந்தெந்த இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது ? எப்போது திருப்பிப் புறப்படுவதாக இருக்கிறது ? இந்த ராணுவத் துப்பாக்கி பிரயோகத்தினால் எத்தனை பேர் இறந்தார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி அவரவருக்குக் கருத்து இருக்கிறது. கனம் அங்கத்தினர் 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் சொல்வதற்கு இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை. எங்கெங்கே இருக்கிறது, இருக்கிறதா, இல்லையா என்பதுகூட இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை. ஆக நான் சொல்வதற்கு இல்லை. ராணுவத்தினரை அனுவசியமாக எங்கும் வைக்கப் போவது இல்லை.

திரு. எம். எஸ். மணி : இந்தப் போராட்டம் சம்பந்தமாக மற்ற மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட போலீசாருக்கும், ராணுவத்தினருக்கும் இதுவரை எவ்வளவு செலவாகி இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் சொன்ன 'ஸடாட்டிஸ்டிக்ஸ்' இன்னும் நிரூபிக்கப்படவில்லை. ஒரு 'நான்-அபிஷியல்', 'பப்ளிக் என்க்வயரி கமிஷன்' பொதுமக்கள் விசாரணைக் குழு— அமைக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் உத்தேசம் இல்லை.

Use of machine guns

* 359 Q.—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that machine guns were used by the Army during the recent Anti-Hindi agitation in the State; and

(*b*) if so, at how many places?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI A. KUNJAN NADAR : Sir, from whom was the Military taking orders? Was it through the Police or directly from the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am sorry I shall not be able to furnish any answer to this question.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த ராணுவத்தினர் இரவு நேரங்களில், ஆயிரம் விளக்கு, மக்கித் தோட்டம், சேத்துப்பட்டு ஜெகநாதபுரம், மங்களபுரம் போன்ற இடங்களில் புகுந்து அங்கிருந்த கர்ப்பிணிப் பெண்களை அடித்து நொறுக்கினார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

Hogenakkal Power Project

* 360 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to place on the Table of the House a copy of the report of the Engineers who conducted survey and investigation on the Hogenakkal Power Project?

THE HON. SRI R. VENKATARAMAN : It is considered that it will not be in the public interest to place the Scheme Report on the Table of the House at present.